**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 160/2024**

**Deposition of P.W.** 7

Name : திரு. தினகராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused** Produced through V.C.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது குலசேகரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 29.11.2023ம் தேதி நான் இரவு ரோந்து பணியில் இருந்தேன். இரவு சுமார் 10.20 மணிக்கு காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு கிடைத்த தகவல் படி தலைமைக்காவலர் திரு. ஸ்டாலின், முதல்நிலை காவலர் திரு. சுஜின் ஆகியவர்கள் காட்டாத்துறை சரல்விளையை சேர்ந்த சாந்தி என்பவரது வீட்டிற்கு சென்றார்கள். அங்கு சாந்தியின் மகன் சஜீவன் ராஜ் என்பவர் வீட்டு பொருட்களை உடைத்து சேதப்படுத்தியதை விசாரிக்க சென்ற போலீசார் போலீசாரை தரக்குறைவாக பேசி அடிக்க முயற்சி செய்ததை சுஜின் தனது செல்போணில் பதிவு செய்துள்ளார். உடனே சஜீவன்ராஜ்

சுஜினின் போனை கையால் தட்டிவிட்டு உடைத்து கத்தியால் சுஜினை குத்த வந்துள்ளார். அதை தடுத்த போதுசுஜினின் இடதுகை பெருவிரலில் காயம் ஏற்பட்டுள்ளது. மீண்டும் தாக்க முற்பட்டபோது வலது கையால் தடுக்க வலதுகையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தை ஸ்டாலின் என்னிடம் கூறினார், நான் சம்பவ இடத்திற்கு சென்று நானும், ஸ்டாலினும் சுஜினை தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனோம். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. சம்பவ சமயம் நான் தான் இரவு அதிகாரி என்பதால் எனக்கு தான் தகவல் கொடுக்கவில்லை. சம்பவம் தொடர்பாக 01.12.2023ம் தேதி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அ.சா.1 காவலர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயாரித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பொய் சாட்சியமஅளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 160/2024**

**Deposition of P.W.** 8

Name : மோதிலால்

S/o, D/o, W/o : அல்போன்ஸ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused** Produced through V.C.

<u>முதல் விசாரணை</u>–

நான் சரல்விளையில் வசித்து வருகிறேன். நான் ஸ்டுடியோ வைத்துள்ளேன். வீடியோவில் ஆஜர்படுத்தபட்டுள்ள எதிரி சஜீவன் ராஜ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டடப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். 04.01.2024ம் தேதி காலை 06.00 மணிக்கு நானும் அஜினும் புலிப்பனம் சந்திப்பில் இருந்த போது தக்கலை காவல் ஆய்வாளர் எதிரி சஜீவன்ராஜை விசாரித்தார். வீட்டில் கத்தியை மறைத்து வைத்திருப்பதாக சொல்லி அழைத்து சென்றார்கள். சஜீவன்ராஜின் வீட்டின் பின்பக்கம் இருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த அத்தாட்சியிலும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2. அத்தாட்சி அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காட்டப்பட்ட ஆவணத்தில் கத்தியை கைப்பற்றியதாக எழுதப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. எழுதப்படாத தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசாருடன் நான் எங்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 160/2024**

**Deposition of P.W.** 9

Name : அஜின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused** Produced through V.C.

<u>முதல் விசாரணை</u>–

நான் பனைவிளையில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 04.01.2024ம் தேதி காலை 06.00 மணிக்கு நானும், எனது அண்ணன் மோதிலாலும் புலிப்பனம் பேரூந்து நிறுத்ததில் நின்று கொண்டிருந்த போது போலீசார் சஜீவன் ராஜை அழைத்து வந்து விசாரித்தார்கள். கத்தியை வீட்டில் வைத்திருப்பதாக கூறினார். சஜீவன்ராஜ் வீட்டிற்கு போனோம் அவரது வீட்டிற்கு பின்புறம் இருந்து கத்தியை எடுத்து கொடுத்தார். அப்போது தயார் செய்யப்பட்ட அத்தாட்சியிலும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. போலீசார்ஒப்புதல் வாக்குமூலத்தை கைப்பட எழுதினார் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.